1970 ஆகஸ்ட் 27]

போக்குவரத்துத் துறையில் பீக் ஹவர் பிராப்ளம், நெரிசல் பிரச்னை மிகவும் முக்கியமான பிரச்னை. இந்தப் பிரச்னையை சமாளிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறது. மேற்கொண்டு பஸ்களை விடவும், மேற்கொண்டு சில சீர்திருத்தங்களை செய்வதற்குமான முயற்சிகளை இந்த அரசு எடுத்துக் கொண்டு வருகிறது.

திரு. கே. விநாயகம் : சட்டப்படி, இந்த ட்ரான்ஸ்போர்ட் ரூல்ஸ் இருக்கின்றன. அதன் விளைவாக 25 பேர்களுக்கு மேல் ஏற்றக்கூடாது என்று விதி கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த நேரத்தில் அதிகமாக ஏற்றிக்கொள்ளுங்கள் என்று நேரடியாக, ப்ரைவேட் இன்ஸ்ட்ரக்ஷன் கொடுப்பது, அதிகார பூர்வமாகச் செல்லாது என்று சில கண்டக்டர்கள், ட்ரைவர்கள் மறுத்தது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மூலக் கேள்வியோடு இது தொடர்பு கொண்டது இல்லை. அது ஒரு குறிப்பிட்ட நாளில் ஏற்பட்ட தகராறு பற்றியது. சில மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் அந்த ஊழியர்களை அந்த இடத்திலேயே சஸ்பெண்ட் செய்ய வேண்டும் என்றார்கள். அதிகாரி விசாரணை செய்ய வேண்டும் என்று சொன்னார்கள். விசாரணைக்குப் பிறகு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

DR. H. V. HANDE : Sir, arising out of the main question is it not a fact that there is constantly trouble between the conductor and the passengers and if so, whether the Government will come forward to see that the trouble is put an end to? This trouble has been there for the last 3-1/2 years and three Ministers have held the Transport portfolio but nothing has happened. Still the same state of affairs continues without rectification. So, will the Hon. Minister at least see that a couple of routes are thrown open to the private operators so that there could be competition in this field. Already the Government have released a large number of buses for the long distance routes with the result that we do not have enough buses for the City. So, will the Government come forward to solve this vexatious problem which is eluding solution for the past several years?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : All attempts are being made seriously to rectify the defects. கனம் உறுப்பினர் தனியார்களை இதற்காக ஊக்குவிக்க வேண்டும் என்று சொல்வதை ஏற்றுக் கொள்வதற்கில்லை.

பனை நுங்கு ஏற்றுமதி

* 79 வினா—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பனை நுங்குகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யத் தமிழ்நாடு பனைவெல்ல சம்மேளனம் முடிவு செய்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) ஆம்.

(இ) தமிழ்நாடு பனைவெல்ல கூட்டுறவுச் சம்மேளனம் 1968–69-ல் பனை நுங்கைப் பாதுகாப்பதற்கான ஒரு சோதனையை நடத்தியது. இச் சோதனையில் வெற்றிகிட்டியது. இது சிறு அளவில் தயாரிக்கப்பட்டு உள்ளூர் சந்தையில் விற்கப்பட்டது. அதன் மூலம் பொதுமக்கள் கருத்து அறியப்பட்டது. நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. பனை நுங்கு கொண்ட மாதிரி டப்பிகள் (Sample tins) மேற்கு ஜெர்மனிக்கு அனுப்பப்பட்டுள்ளன.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாதிரி பனை நுங்குகளை வெளிநாட்டுக்கு முன்னால் அனுப்பினார்களா? தென் மாவட்டங்களில் அதிகமாக இவை கிடைப்பதால் பக்குவப்படுத்தி வெளிநாடுகளுக்கு அனுப்பினால், அந்நியச் செலாவணி கிடைக்குமே. ஆகவே, அந்த முயற்சியில் அரசினர் செயல்படுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : இதற்கு முன்னால் இந்த வாரியத்தின் மூலம் வெளிநாட்டுக்கு அனுப்பியதாகத் தகவல் இல்லை. இப்பொழுது ஏற்பட்டிருக்கும் வெற்றியின் காரணமாக, அந்நியச் செலாவணி கிடைக்கும் என்பதால், ஏற்றுமதி செய்ய, இந்த சம்மேளனம் பம்பாயில் உள்ள டின் எண்டர்ப்ரைஸஸ் என்ற நிறுவனத்தோடு தொடர்பு கொண்டு இருக்கிறது. இது படிப்படியாக வளரும் முறையில் முயற்சிகள் எடுக்கப்படும்.

Loan from Life Insurance Corporation of India

* 80 Q.—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether the City Corporation authorities propose to raise a debenture loan of Rupees three crores from the Life Insurance Corporation of India; and

(*b*) if so, for what purposes?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : 1970 பிப்ரவரியில் பம்பாயிலுள்ள இந்திய ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திடமிருந்து, ஈட்டு ஆவணத்தின் மேல் சென்னை மாநகராட்சி ரூ. 3 கோடி கடன் பெற்றுள்ளது.

தன்னுடைய நிதிவாயில்களைப் பெருக்கி முக்கியத் திட்டங்களுக்கு நிதி ஒதுக்க வகை செய்யும் பொருட்டு இவ்வாறு கடன் பெற்றுள்ளது.

திரு. கே. விநயகம் : சார், மாநகராட்சி நிதி நிலை சரிவர இல்லை என்றும், அவர்கள் மாதந்தோறும் ஊழியர்களுடைய சம்பளத்தையே சரிவர குறிப்பிட்ட தேதியில் கொடுக்க முடியவில்லை என்று இருக்கும் நிலையில், இந்த மாதிரி புதிய திட்டம் போட்டு, இதை அதைச் செய்யப் போகிறோம் என்று சொல்லி பலரிடமும் கடன் வாங்குவதற்கு நம் அரசின் மூலமாக வாங்கி, வாங்கிய